DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் திங்கள்கிழமை 26ம் நாள் சாட்சியாகிய ஷேக்தாவூத் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஷேக்தாவூத் | வயது | 35 |
| த/பெ. | உசேன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | கார் ஓட்டுநர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.70/2019**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>முதல் விசாரணை 26.05.2025 அ.சா.5</u>**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 2017ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. வெங்கடேசபுரத்தில் போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நானும், எனது நண்பர் அப்ரோஸ்கான் அந்த வழியாக சென்றுகொண்டிருந்த போது போலீசார் அங்கு விசாரணை நடத்திக் கொண்டிருந்தனர். எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>

2. 24.01.2017ம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்.43/2017 வழக்கில் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், அப்ரோஸ்கான் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில்

நான் சாட்சியாக பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்றதால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.